**இலங்கை நியமங்கள் நிறுவகம் 2010**

-----------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

----------------------

**1.1 அபிப்பிராயம்**

-------------------

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்கு வழங்கப்பட்ட உயர்ந்தபட்ச தகவல்களுக்கும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, இலங்கை நியமங்கள் நிறுவகம் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உரிய கணக்கேடுகளைப் பேணியிருந்தது எனவும், இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களால் நிதிக்கூற்றுக்களில் விளையும் தாக்கத்தைத் தவிர இலங்கை நியமங்கள் நிறுவகத்தின் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைவரத்தையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது செயற்பாட்டு நடவடிக்கைகளின் நிதிசார் விளைவுகளையும் காசுப்பாய்ச்சலையும் உண்மையாகவும் நேர்மையாகவும் காட்டும் வண்ணம் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

**1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

-------------------------------------------------------------

**1.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மை (இ.க.நி)**

------------------------------------------------------------------------------------------

| இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) இ.க.நி 16 | ஒரு வருட சேவைக்காலத்தினைப் பூர்த்தி செய்த உத்தியோகத்தர்களுக்காகவும் பணிக்கொடைக்கான ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், 1 இலிருந்து 5 ஆண்டுகள் வரையான சேவைக் காலத்தனைப் பூர்த்திசெய்த 24 ஊழியர்களுக்காக ரூபா 675,330 தொகையான பணிக்கொடை ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. |

(ஆ) இ.க.நி. 18 — சொத்துக்கள் கொள்வனவு செய்த திகதியிலிருந்து பெறுமானத் தேய்விற்கு ஏற்பாடு செய்யப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 21,420,178 பெறுமதியான சொத்துக்களுக்காக பெறுமானத்தேய்விற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

**1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

---------------------------------------

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது களஞ்சியத்தில் காணப்பட்ட ரூபா 414,951 பெறுமதியான பொருட்கள் கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை நியம சான்றிதழ் இலச்சினை மற்றும் நியமங்கள் சான்றிதழ்களுக்குரிய பட்டியல்களை வழங்காமையின் காரணமாக பெறவேண்டிய வருடாந்தக் கட்டணம் கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

**1.2.3 கணக்கிணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

--------------------------------------------------------------

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட மீதிகளுக்கும் அது தொடர்பான பேரேட்டுக்கணக்குகள் / துணைப் பதிவேடுகளில் காட்டப்பட்ட மீதிகளிற்குமிடையே பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| விபரம் | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதி | பேரேட்டுக் கணக்கு/ துணைப்பதிவேடுகளின் பிரகாரம் மீதி | வேறுபாடு |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| விழா முற்பணங்கள் | 224,731 | 192,500 | 32,231 |
| இடர் கடன் | 26,957,269 | 26,955,862 | 1,407 |
| பயிற்சிக் கற்கைநெறி வருமானம் | 19,317,164 | 19,325,164 | 8,000 |
| துவிச்சக்கர வண்டிக் கடன் | 93,046 | 87,150 | 5,896 |

### 1.2.4 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 5,144,788 தொகையான 35 வியாபாரக் கடன்பட்டோர் கணக்குகளுக்கான மீதிகள் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிலுவையாகக் காணப்பட்ட கற்கைநெறிகள் உரிய சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளதனால் ரூபா 379,180 தொகையான பயிற்சி கற்கைநெறி வருமானங்களை அறவீடு செய்வது நிச்சயமற்றதாகக் காணப்பட்டது.

(இ) வெளிநாட்டுப் பயணத்திற்காக மேலதிகமாகச் செலுத்தப்பட்ட ரூபா 8,400 ஆன அமையச் செலவுப் படிப்பணம் மீள அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) இலங்கை நியமங்கள் இலச்சினையைப் பயன்படுத்துவது தொடர்பாக அறவிடப்படவேண்டிய ரூபா 853,007 தொகையான வருடாந்தக் கட்டணம் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக நிலுவையாகக் காணப்பட்டது.

(உ) ரூபா 492,446 தொகையான 09 கடன்கொடுத்தோர் மீதிகள் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 1.2.5 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை

பின்வரும் ஒவ்வொரு கணக்கு விடயங்களுக்கு எதிராகக் காட்டப்பட்டுள்ள சான்றுகள் இல்லாமையின் காரணமாக அவற்றினை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதி செய்யவோ அல்லது ஏற்றுக்கொள்ளவோ முடியாதிருந்தது.

| விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|
| | ரூபா | |
| தளபாடமும் உபகரணங்களும் | 9,961,546 | ஒவ்வொரு சொத்தினதும் வருட இறுதியில் உள்ளவாறான மீதியினைக் காட்டும் பட்டோலை, பொருள் மெய்மையாய்வு அறிக்கை என்பன. |
| அலுவலக உபகரணம் | 53,145,481 | |
| ஆய்வுகூட உபகரணம் | 542,171,283 | |
| ஆய்வுகூட தளபாடங்கள் | 3,942,687 | |
| நூால் நிலைய புத்தகங்கள் | 15,049,541 | |

### 1.2.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், என்பவற்றுடனான இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 14 ஆம் பிரிவு | கணக்காண்டு முடிவடைந்து 10 மாதங்களுக்குள் ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவேண்டிய போதிலும் 2010 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் 2007 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை வரையிலும் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (ஆ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்று நிருபத்தின் 8.3.3 ஆம் பந்தி மற்றும் 2009 மே 26 ஆந் திகதிய 39 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபம் | I. வருகையினை அடிப்படையாகக் கொண்ட ஊக்குவிப்பு படிக் கொடுப்பனவிற்காக ஆண்டின் போது ரூபா 6,094,000 தொகை செலவுசெய்யப்பட்டிருந்ததுடன் இக் கொடுப்பனவிற்காக திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப் பட்டிருக்கவில்லை.<br><br>II. ஊக்குவிப்பு படிக் கொடுப்பனவின் போது தேசிய தொழில் பயிற்சி மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபையில் பயிற்சிக்காக இணைத்துக்கொள்ளப்பட்ட 05 உத்தியோகத்தர்களுக்கும் ரூபா 20,000 படி ரூபா 72,525 தொகை அங்கீகாரமின்றி செலுத்தப்பட்டிருந்தது.<br><br>III. 10 நாட்கள் சம்பளமற்ற விடுமுறை அல்லது அதற்கு மேலதிகமாக விடுமுறை எடுக்கும் உத்தியோகத்தர்கள் ஊக்குவிப்பு படிக்கு தகமையற்றவர்களாக இருந்த போதிலும் நிறுவனத்தில் அரைச் சம்பளத்தில் 84 நாட்கள் மகப்பேற்று விடுமுறையினைப் பெற்றுக்கொண்ட உத்தியோகத்தர்களுக்கும் ரூபா 40,000 படி ரூபா 80,000 ஊக்குவிப்புப் படியாகக் செலுத்தப்பட்டிருந்தது. |
| | 4.2.2 ஆம் பந்தி | பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் மாதாந்தம் நடாத்தப்படவேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்காக 4 கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன. |
| (இ) | 2001 யூலை 02 ஆந் திகதிய எம்என்/ஜீஏ2/சுற்றுநிருபம்/2001/03 ஆம் இலக்க நிதி, திட்டமிடல் அமைச்சு சுற்றுநிருபம் | வெளிநாட்டு பயணங்களில் பங்குபற்றிய மூன்று உத்தியோகத்தர்களினால் பயிற்சிக்குரிய அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஈ) | 2003 மார்ச் 28 ஆந் திகதிய எம்எப்/ரீஆர்/1/2003 ஆம் இலக்க நிதி அமைச்சு செயலாளரின் சுற்றுநிருபம் மற்றும் 2004 ஆகஸ்ட் 31 ஆந் திகதிய 353/5 ஆம் இலக்க பொது நிதி சுற்றுநிருபம் | வாடகை வாகனங்களைக் கொள்வனவு செய்யும் போது மாதாந்த வாடகை ரூபா 40,000 இனை மிகைக்கும் சந்தர்ப்பங்களில் அதற்காக பொதுத் திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படவேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட 04 வாகனங்களுக்காக அவ் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 2005 சனவரி 31 ஆந் திகதிய பீஈடீ/28 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபம் | வாடகை வாகனங்களைப் பயன்படுத்துவதற்காக பொது முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | 2005 சனவரி 31 ஆந் திகதிய பீடீஏ/96/1/457 ஆம் இலக்க தேசிய வரவுசெலவுத் திட்ட சுற்றுநிருபம் | 2005 ஆம் ஆண்டின் போது சுனாமி உதவியாகச் சேகரிக்கப்பட்ட ரூபா 125,894 தொகை திறைசேரிக்கு அனுப்பிவைக்கப்படாது நிறுவனத்தில் வைத்திருக்கப்பட்டது. |
| (எ) | இலங்கை நியமங்கள் நிறுவகத்தின் 2003 செப்தெம்பர் 01 ஆந் திகதிய பொது உத்தரவுப் பத்திர நிபந்தனை | உத்தரவுப் பத்திரம் ஒன்று தடைசெய்யப்படும் போது அரசாங்க வர்தத்தமானியில் அல்லது செய்திப்பத்திரிகைகளில் இது தொடர்பாக அறிவித்தல் வெளியிடப்பட வேண்டிய போதிலும் இரத்துச் செய்யப்பட்ட உத்தரவுப் பத்திரங்கள் தொடர்பாக அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இது அத்தியாவசியமான நடவடிக்கை அல்ல என தலைவரினால் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. |
| (ஏ) | அரசாங்க நிதிப் பிரமாணங்கள் (நி.பி) | |
| | (i) நி.பி 271(2) | செலுத்தப்படாத சம்பளமும் கூலியும் இருந்தால் அவை 14 நாட்கள் முடிவில் மிகைக்கட்டண கணக்கிற்கு, |

| | | |
|---|---|---|
| | | வருமானத்திற்கு அல்லது ஏனைய குறிப்பிடப்பட்ட கணக்கிற்கு செலவுவைக்கப்பட்டு முடிவுறுத்தப்பட வேண்டிய போதிலும் ரூபா 51,660 தொகையான அவ்வாறான செலுத்தப்படாத சம்பளங்கள் தொடர்பாக நி.பி பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | நி.பி 757(2) | ஒவ்வொரு ஆண்டும் மேற்கொள்ளப்படுகின்ற பொருள் மெய்மையாய்வின் பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளுக்கான பொருள் மெய்மையாய்வு அறிக்கை அவ்வாறு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

### 1.2.7 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்

வருடாந்த பொருள் மெய்மையாய்வில் வெளிப்படுத்தப்பட்ட ரூபா 21,548 தொகையான இருப்புக் குறைவும் ரூபா 15,576 தொகையான இருப்பு மிகையும் முறையான அங்கீகாரமின்றி வருமான செலவுக் கணக்கிற்குக் கொண்டுவரப்பட்டிருந்தன.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் மீளாய்வு

### 2.1.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிறுவனத்தின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 95,956,902 மிகையாக இருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான அதனோடொத்த மிகை ரூபா 49,915,902 ஆக இருந்ததனால் மிகை ரூபா 46,041,000 ஆல் முன்னேற்றமடைந்திருந்தது. வருமானம் ரூபா 66,168,998 ஆல் அதிகரித்தல்,

செயற்பாட்டுச் செலவுகள் ரூபா 20,684,588 ஆல் குறைவடைதல், மீண்டுவரும் மானியத்தினைப் பெற்றுக்கொள்ளாமை என்பன இம்முன்னேற்றத்திற்கு காரணமாக இருந்தன.

**2.1.2 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முறையற்றவகையில் தரப்பரிசோதனை அறிக்கைகளை வழங்குவது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) இறக்குமதி பரிசோதனை / தரச்சான்றிதழ் தொடர்பான நடைமுறையின் 1.1.4 ஆம் பந்தியின் பிரகாரம் பரிசோதனை அறிக்கை இல்லாமல் துறைமுகத்திலிருந்து பொருட்களை விடுவிக்க முடியாது என்ற போதிலும் முறையற்ற வகையில் வழங்கப்பட்ட நியமச் சான்றிதழினைப் பயன்படுத்தி தகரத்தில் அடைக்கப்பட்ட மீன்களின் ஓர் இருப்பு விடுவிக்கப்பட்டிருந்தது.

(ii) இத் தகரத்தில் அடைக்கப்பட்ட மீன் இருப்பிற்குரிய பரிசோதனைக்காக மாதிரிகள் பெற்றுக்கொள்வதற்கு முன்னர் நியமப் பரிசோதனை உத்தியோகத்தர் ஒருவரினால் இறக்குமதியாளர் பொருட்களை விடுவிக்கக்கூடிய வகையில் இறக்குமதியாளரின் பிரதி மாத்திரம் சான்றுபடுத்தப்பட்டு வழங்கப்பட்டிருந்தது.

(iii) தெரிவுப் பரிசோதனையின் போது இத் தகரத்தில் அடைக்கப்பட்ட மீன் இருப்புக்கள் உணவிற்குப் பொருத்தமான தரத்தினைக் கொண்டுள்ளது என உறுதிப்படுத்தப்பட்டிருந்ததுடன் இது வரை தகரத்திலடைக்கப்பட்ட மீன் இருப்புக்களில் ஒரு பகுதி சந்தைக்கு வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) வழங்கப்பட்ட 05 முற்பணங்கள் தீர்த்துவைக்கப்படாதிருந்தும் ஒரு உத்தியோகத்தருக்கு மீண்டும் முற்பணங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் முற்பணங்களைத் தீர்த்துவைப்பதற்காக சமர்ப்பிக்கப்பட்ட விலைப்பட்டியல்களைப் பரிசோதனை செய்த போது முற்பணங்கள்

பெற்றுக்கொள்ளப்பட்ட திகதிக்கு முன்னைய திகதியினைக் கொண்ட விலைப்பட்டியல்கள் சமர்ப்பிக்கப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

(இ) 2009 நவம்பர் 17 ஆந் திகதி வெளிநாட்டு சுற்றுப்பணம் செல்வதற்காக மேலதிகமாக வழங்கப்பட்ட ரூபா 20,169 தொகையான முற்பணம் உரிய உத்தியோகத்தரினால் தீர்த்துவைக்கப்படாதிருந்ததுடன் நாட்குறிப்பின் மூலம் வெளிநாட்டுப் பயிற்சி கணக்கிற்கு மாற்றம் செய்யப்பட்டிருந்தது.

**2.2 செயற்பாட்டு மீளாய்வு**

**2.2.1 பௌதீகச் செயலாற்றல்**

வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் காட்டப்பட்டுள்ள எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைந்து கொள்ளும் செயல்முன்னேற்றம் கீழே தரப்பட்டுள்ளது.

| விடயம் | | இலக்கு | உள்ளபடியான செயலாற்றல் |
|---|---|---|---|
| பொறியியல் நியமம் | i. | 08 நியம மேம்பாட்டு கருத்தரங்குகளை நடாத்துதல் | கருத்தரங்குகள் நடாத்தப்படவில்லை. |
| | ii. | 18 தேசிய நியமங்களைத் தயாரித்தல் | 16 நியமங்கள் தயாரிக்கப்பட்டிருந்தன. |
| | iii. | 25 சர்வதேச பொறியியல் நியமங்களைத் தொடர்புபடுத்துதல் | 12 நியமங்கள் மாத்திரம் தொடர்புபடுத்தப்பட்டிருந்தன. |
| | iv | 22 சர்வதேச பொறியியல் நியமங்களை மீண்டும் தயாரித்தல் | 01 நியமம் மாத்திரம் தயாரிக்கப்பட்டிருந்தது. |
| பயிற்றுவித்தல் | | 02 தொலைக்கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் | தொலைக்கல்வி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட வில்லை. |

| | | |
|---|---|---|
| தரச்சான்றிதழ்படுத்தல் | முந்திரிகை ஏற்றுமதி உற்பத்திக்காக 04 தரச்சான்றிதழ்களை வழங்குதல் | முந்திரிகை உற்பத்திக்காக தரச்சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| விஞ்ஞான நியமங்கள் | 17 தேசிய நியமங்களைத் தயாரித்தல், 112 சர்வதேச விஞ்ஞான நியமங்களைத் தொடர்புபடுத்துதல். | 05 நியமங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. 45 நியமங்கள் மாத்திரம் தொடர்புபடுத்தப்பட்டுள்ளன. |
| ஆய்வுகூடச்சேவை | வெளியக சேவை வழங்குனர்களுக்கு 3400 பரிசோதனை அறிக்கைகள் வழங்குதல் | 1,433 அறிக்கைகள் வழங்கப்பட்டுள்ளன. |

### 2.2.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

நூல் நிலையத்தை நிருவகித்தல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நூல் நிலையத்திலிருந்து வெளியே எடுத்துச் செல்வதற்கு உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட புத்தகங்களில் 368 புத்தகங்கள் 2011 மார்ச் 31 வரையும் ஒப்படைக்கப்படாதிருந்ததுடன் அவற்றில் சில புத்தகங்கள் 1990 ஆம் ஆண்டிற்குரியவையாகும்.

(ஆ) நிறுவனத்தின் சில உத்தியோகத்தர்கள் நூல்நிலையத்திற்கு வழங்கிய 151 புத்தகங்கள் அப்புத்தகங்கள் வழங்கிய திகதியிலிருந்து நீண்டகாலமாக பயன்படுத்தப்படாது வைத்திருக்கப்பட்டன.

(இ) வெளி நபர்களுக்கு நூல்நிலையத்திலிருந்து புத்தகங்களை வழங்கும் போது ரூபா 1,500 தொகையான மீளச் செலுத்தும் முற்பணம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு முற்பணம் ஒன்று பெற்றுக்கொள்ளப்படாது ரூபா 130,000 பெறுமதியான 15 புத்தகங்கள்

2002 இலிருந்து 2007 வரையான ஆண்டுகளில் வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டு இறுதிவரை மீள ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு 1993 ஆம் ஆண்டிலிருந்து 2010 ஆம் ஆண்டு வரையான காலத்தின் போது 99 புத்தகங்கள் நூல்நிலையத்திலிருந்து வழங்கப்பட்டிருந்ததுடன், 2011 சனவரி 31 ஆந் திகதி வரை அவை மீள ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 2008 ஆம் ஆண்டிற்காக நடாத்தப்பட்ட பொருள் மெய்மையாய்வின் போது 56 நூல்நிலையப் புத்தகங்களின் பற்றாக்குறை வெளிப்படுத்தப்பட்டதுடன் அப்புத்தகங்களின் பெறுமதியினை பொறுப்பான உத்தியோகத்தரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.

**2.2.3 செயற்பாட்டுச் செயற்திறனின்மை**

சிறிய மற்றும் நடுத்தர அளவு முயற்சி நிறுவனங்களின் முறைமைகளைச் சான்றுபடுத்துவதற்காக ரூபா 30,329,577 நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தும் அதில் ரூபா 4,245,575 தொகை வேறு செலவுகளுக்காகச் செலவிடப்பட்டிருந்தது. முதலாவது மற்றும் இரண்டாவது கட்டங்களின் மூலம் முறையே 11 மற்றும் 19 நிறுவனங்களுக்கு நிதி வழங்கப்பட்டிருந்தும் அதில் முறையே 09 மற்றும் 15 நிறுவனங்கள் மாத்திரம் சான்றிதழ்களைப் பெற்றுக்கொண்டிருந்தன.

**2.2.4 ஆளணி முகாமைத்துவத்திலுள்ள பலவீனங்கள்**

மீளாய்வாண்டின் இறுதி வரையும் நிறுவனத்தின் 07 உயர் மட்ட நிறைவேற்றுப் பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் அவற்றில் சில பதவிகள் 2004 ஆம் ஆண்டிலிருந்து வெற்றிடமாகக் காணப்பட்டன.

**2.2.5 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் செயற்பாடுகள்**

2010 ஆம் ஆண்டிற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

**3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

-----------------------------------------------------------

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) மனிதவள முகாமைத்துவம்

(ஆ) நூல்நிலைய நிர்வாகம்

(இ) இருப்புக் கட்டுப்பாடு

(ஈ) கடன்பட்டோர் கட்டுப்பாடு

(உ) பொருள் மெய்மையாய்வு

(ஊ) இறக்குமதிப் பரிசோதனை

(எ) முற்பணங்கள் செலுத்துதல்

(ஏ) பொருட் பதிவேட்டினைப் பேணுதல்.